செய்தி வெளியீடு எண் :06 நாள் : 09.03.2018

***தேனி மாவட்டம்,***
***தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (மகளிர் திட்டம்) சார்பில்***
***தற்காலிக சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர் பணிக்கு***
***விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன***
***மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தகவல் :-***

*****

தேனி மாவட்டத்தில் உள்ள 8 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள களப்பகுதிகளான பெரியகுளம் ஊராட்சி ஒன்றிய களப்பகுதிகள் (1).டி.வாடிப்பட்டி, (2).மேல்மங்கலம், உத்தமபாளையம் ஊராட்சி ஒன்றிய களப்பகுதிகள் (3).உ.அம்மாபட்டி, (4).இலட்சுமிநாயக்கன்பட்டி, சின்னமனூர் ஊராட்சி ஒன்றய களப்பகுதிகள் (5).எரசக்கநாயக்கனூர், (6). சங்கராபுரம், கம்பம் ஊராட்சி ஒன்றிய களப்பகுதி (7).சுருளிப்பட்டி, போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றிய களப்பகுதிகள் (8).சில்லமரத்துபட்டி, (9). கோடாங்கிபட்டி, தேனி ஊராட்சி ஒன்றிய களப்பகுதி (10).கொடுவிலார்பட்டி, ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றிய களப்பகுதிகள் (11).எஸ்.எஸ்.புரம், (12).கன்னியப்பபிள்ளைபட்டி, க.மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றிய களப்பகுதிகள் (13).கடமலைக்குண்டு, (14).வருசநாடு ஆகிய 14 களப்பகுதிகளில் சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர் பணிக்கு முற்றிலும் தற்காலிகமாக பணிபுரிய கீழ்க்கண்ட தகுதி மற்றும் முன் அனுபவம் உள்ளவர்கள் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் 15.03.2018-க்குள் விண்ணப்பிக்கலாம். இப்பணியிடங்களுக்கான எழுத்துத்தேர்வு 19.03.2018 அன்று நடைபெறவுள்ளது.

மேலும் இப்பணியிடத்திற்கு குறைந்தது பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். நன்கு எழுத படிக்க மற்றும் கணக்கிடும் திறன் உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும். ஊராட்சி அளவிலான கூட்டமைப்பைச் சார்ந்த குழு உறுப்பினராக இருத்தல் வேண்டும். தேர்வு செய்யப்பட வேண்டிய உறுப்பினர் அதே தொகுப்பைச் சார்ந்தவராக இருத்தல் அவசியம். மக்கள் நிலை ஆய்வால் கண்டறியப்பட்ட உறுப்பினராக இருத்தல் வேண்டும். நல்ல தகவல் தொடர்பு திறன் உடையவர்களாக இருத்தல் வேண்டும். கிராமத்திலிருந்து அருகாமையிலுள்ள வங்கிகளுக்குச் செல்ல விருப்பம் உள்ளவர்களாக இருத்தல் அவசியம். கணினி திறன் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். கைபேசி வைத்திருப்பவர்களாகவும் அதை இயக்கி குறுந்தகவல் அனுப்பவும் பெறவும் திறனுடையவர்களாகவும் இருத்தல் போன்ற பிற தகுதிகள் பெற்றிருக்க வேண்டும்.

விண்ணப்பிக்கும் நாளன்று 18 வயதுக்கு மேல் 35 வயதுக்குள் இருக்க வேண்டும். மாதாந்திர மதிப்பூதியம் ரூ.2,000/-மட்டும். (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலமாக உரிய விண்ணப்பத்தில் விண்ணப்பிக்க வேண்டும். (விண்ணப்பங்கள் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் மகளிர் திட்டம், திட்ட இயக்குநர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்) விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி மற்றும் தேர்வு நடைபெறும் இடம் திட்ட இயக்குநர், 4வது தளம், அறை எண்.71, மகளிர் திட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் வளாகம், தேனி ஆகும் இவ்வாய்ப்பினை மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் பயன்படுத்தி கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**